## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### அரச முத்திரையுடனான தங்க வளையல்

அரச முத்திரையுடனான 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தத் தங்க வளையல் தெற்கு ஆசியக் கண்காட்சிக் கூடம் 7–ல் வைக்கப் பட்டுள்ளது. 'கீர்த்திமுகத்'தால் அலங்கரிக்கப்பட்ட உருண்டை ஒன்றைத் தாங்கிக் கொண்டிருக்கும் இரு மகரங்களும் ஒன்றை ஒன்று நோக்கியிருக்கும்படி இந்த வளையல் வடிவமைக்கப் பட்டுள்ளது. கீர்த்திமுக, மகரக் கலவையிலான வளையல் மிகவும் அரிது. இந்த வளையல் மீது தமிழ்நாட்டின் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சேதுபதிகளைக் குறிக்கும் 'சேதுபதி சமஸ்தானம்' என்னும் சொல் பொறிக்கப்பட்டுள்ளது.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

### தங்கக் காப்பு (வங்கி)

1926ஆம் ஆண்டு இந்தத் தங்கக் காப்பு (வங்கி) உள்ளிட்ட சில தங்க ஆபரணங்கள் புக்கிட் லரங்கான் எனப்படும் ஃபோர்ட் கேன்னிங் குன்றில் கண்டெடுக்கப்பட்டன. 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தக் காப்பானது 'கால' எனப்படும் காலத்தையும் அழிவையும் குறிக்கும் இந்துக் கடவுளின் வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சியகத்தில் உள்ள தெமாசெக் பகுதியில் இந்த வங்கி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### தென்னிந்திய கோவில் நடனமணிகள்

சரிகை வேலைப்பாடுடன் கூடிய பச்சை வண்ணப் பட்டுச்சேலையில் பாடல் பாடுவதைப் போலவும் சிவப்பு வண்ணப் பரதநாட்டியக் கலைஞரின் உடையில் சுந்தரத்தைக் குறிக்கும் நாட்டியத்தைப் போலவும் அபிநயம் பிடித்தவாறு மரத்தினால் ஆன தேவதாசி களின் ஆளுயரச் சிலைகள் வடிக்கப்பட்டுள்ளன. கடவுளுக்குத் தொண்டு செய்யும் தேவதாசிகளின் இச்சிலைகள் 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. தென்னிந்தியாவின் கர்நாடகாவில் செய்யப்பட்ட இவை, ஆசிய நாகரிக அரும்பொருளகத்தின் தெற்கு ஆசியக் காட்சியகம் 7–ல் வைக்கப்பட்டுள்ளன.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்

### முன்னோடித் தலைமுறை சிங்கப்பூரர் திரு கோவிந்தசாமி பிள்ளை

திரு பி.கோவிந்தசாமி பிள்ளை 1905ஆம் ஆண்டு முதன் முதலாக சிங்கப்பூருக்கு வந்தார். உணவு, தங்குமிடம் மட்டுமே அளித்த மளிகைக் கடையில் பணியாற்றினார். 1929ஆம் ஆண்டு மனைவியுடன் இங்கு குடியேறினார். செட்டியார்களிடம் கடன்பெற்று நஷ்டத்தில் ஓடிக்கொண்டிருந்த மளிகைக் கடையை வாங்கி, வியாபாரத்தைப் பெருக்கினார்; பெருந்தன்மையான இவர் சிறந்த கொடையாளர். ஸ்ரீ பெருமாள் ஆலயம் கட்டியதில் இவரது பங்களிப்பு மிகவும் குறிப்பிடத்தக்கது. இந்திய வர்த்தக சங்கத்தின் நிறுவனரும் இவரே.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)

MM



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### வீணை

கல்விக் கடவுளான சரஸ்வதி தேவியுடனும் இசையுடனும் தொடர்புடையது வீணை. 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த வீணையில் ‘பானை’ எனும் அடிப்பாகம், மேல் பலகை, கழுத்துப்பகுதி, சிங்கத் தலை, யாழியின் முகம் ஆகிய பகுதிகள் பலா மரத்தினால் செய்யப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. தரையில் சம்மணமிட்டு அமர்ந்து வீணையின் சுரைக் குடுக்கையை வலது தொடையில் தாங்கி கும்பத்தை தரையில் இருத்தி, தாள, சுருதித் தந்திகளை இடது கை விரல்களால் அழுத்தி வலது கை விரல் களால் வீணையை மீட்டுவர்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)

MM



படம்: சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்

### அரசி விக்டோரியா 4 அணா அஞ்சல்தலை

சிங்கப்பூரில் 1854ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கிழக்கு இந்தியக் கம்பெனியால் அஞ்சல்தலைகள் அறிமுகப் படுத்தப்பட்டு இந்திய நாணய மதிப்பில் விற்கப்பட்டன. வெளியிடப்பட்ட 75 வகை அஞ்சல் தலைகளிலும் இங்கிலாந்து அரசியார் விக்டோரியாவின் உருவப் படம் பொறிக்கப்பட்டு இருந்தது. முதல் வகை அஞ்சல் தலைகள் கல் அச்சு முறையில் நீல, சிவப்பு நிறங்களில் அச்சிடப்பட்டு 4 அணாவுக்கு விற்கப்பட்டன.

சிங்கப்பூர் அஞ்சல் தலை அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்

### மாலை தொடுப்பவர்

இந்தியச் சமூகத்தில் மத சார்பான திருவிழாக்கள், வீட்டில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் மலர் மாலைகள் மகத்தான இடம் பிடிக்கின்றன. மங்கையர் தலையில் சூடிக் கொள்ளும் ஆபரணமாகவும் பூச்சரம் பயன்படுகிறது. மாலை தொடுப்பதற்கு திறன்மிகு பயிற்சி தேவை. தாய்லாந்து, இந்தோனீசியா, கம்போடியா, லாவோஸ், மியன்மார் போன்ற நாடுகளில் கி.மு. 200ஆம் ஆண்டுக்கும் கி.பி. 15ஆம் நூற்றாண்டுக்கும் இடையே இந்தியர்களின் செல்வாக்கு இருந்ததால் அங்கும் பூமாலைகளைக் காணலாம்.

சிங்கப்பூர் அஞ்சல் தலை அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்

### சிங்கப்பூர் மணமூட்டும் பொருட்கள்

சிங்கப்பூர் உணவு வகைகளில் மணமூட்டும் பொருட்கள் முக்கியமான இடம் பிடிக்கின்றன. 1819ஆம் ஆண்டு சிங்கப்பூர் வரியற்ற துறைமுகமாக நிறுவப்பட்டது. இங்கு குடியேறியவர்கள் பலவித உணவுகளை உருவாக்கினர். அஞ்சல்தலையில், லவங்கப் பட்டை, தேநீர், மஞ்சள், மீன்கறி இந்தியச் சமூகத்தை யும் மல்லி இலை, சாத்தே மலாய் சமூகத்தையும் அன்னாசிப் பூ, சமைத்த வாத்து சீன சமூகத்தையும் புளி, இறால் கறி பெரனாக்கன் சமூகத்தையும் குறிக்கிறது.

சிங்கப்பூர் அஞ்சல் தலை அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: சிங்கப்பூர் அஞ்சல்தலை அரும்பொருளகம்

### மறைந்துவரும் தொழில்கள்: மாவு அரைப்பான்

முற்காலத்தில், உணவுப் பொருட்களை மாவாக அரைத்துத் தந்தவர்கள் பெரும்பாலும் லிட்டில் இந்தியாவில் உள்ள சிராங்கூன் ரோட்டில் கடை வைத்திருந்த இந்திய சமூகத்தினராக இருந்தனர். கடை இருந்த பகுதிகளில் அரைத்த பொருட்களின் மணம் தெருவெங்கும் வியாபித்திருந்தது. தற்போது வீடுகள்தோறும் அரைப்பான் இருப்பதாலும் அரைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் கடைகளில் கிடைப்பதாலும் மாவு அரைக்கும் கடைகளின் தேவை வெகுவாகக் குறைந்துள்ளது.

சிங்கப்பூர் அஞ்சல் தலை அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually


ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: மலாய் மரபுடைமை மையம்

### டெபாக் சிரிஹ் – வெற்றிலை தாம்பூலம்

வெற்றிலை குதப்பும் பழக்கம் பாரம்பரிய மலாய் கலாசாரத்தில் முக்கியமான இடம் பிடிக்கிறது. விருந்தினரை வரவேற்பது, செயல்களின் தொடக்கத்தைக் குறிப்பது போன்றவற்றிற்கு வெற்றிலை வழங்கப்படுகிறது. நிகழ்ச்சியின் தன்மை, அதைத் தயாரிப்பவரின் நோக்கம் ஆகியவற்றிற்கு ஏற்ப வெற்றிலையுடன் சேர்க்கப்படும் பொருட்கள் வேறுபடும். 2,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து புழக்கத்தில் இருக்கும் வெற்றிலை இந்தியா, தென்கிழக்கு ஆசியாவில் பயன்படுத்தப்படுகிறது.

மலாய் மரபுடைமை மையத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

### புடவை, ரவிக்கை, பாவாடை

பொதுவாக தெற்கு ஆசியப் பெண்களால் விரும்பப்படும் தைக்கப்படாத புடவை கொசுவத்துடனும் மடிப்புகளுடனும் அழகாக அணியப்படுகிறது. புடவையானது, ரவிக்கை, பாவாடையுடன் அணியப் படும். புடவையில் இரு கரைகள், நடுப்பகுதி, முந்தானை விதவிதமாக நெய்யப்படுகின்றன. காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கும் இந்தப் புடவையை நன்கொடையாக அளித்தவர் 1964ஆம் ஆண்டு தனது திருமணத்திற்காக சிராங்கூன் ரோட்டில் இருக்கும் பி.கோவிந்தசாமி பிள்ளை & சன்ஸ் கடையில் வாங்கினார்.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually


ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### பூச்சிக்கூடு காதணிகள்

பூச்சிகளின் கூட்டின் மேலே கோபுரக் கலசங்களைப் போல வடிவமைக்கப்பட்டுள்ளன இந்தக் காதணிகள். 19ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர் பகுதியில் பிரபலமாக இருந்த இவை தற்காலத்தில் அரிதாகவே அணியப் படுகின்றன. சிறு வயதிலேயே பெண்கள் காதுகளில் துளை ஏற்படுத்திக்கொண்டு களிமண், இரும்பு, ஈயம் போன்றவற்றால் செய்யப்பட்ட வளையங்களின் மூலம் காதிலுள்ள துளையைப் பெரிதாக்கி பின் இதனை அணிவர். இந்த வகைக் காதணிகளுடன் ‘கொப்பு’ எனப்படும் காது மடலில் அணியக்கூடிய நகையும் தந்தையால் வழங்கப்படும்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### பூச்சிக்கூடு காதணிகள்

பூச்சிகளின் கூட்டின் மேலே கோபுரக் கலசங்களைப் போல வடிவமைக்கப்பட்டுள்ளன இந்தக் காதணிகள்.19ஆம் நூற்றாண்டில் தஞ்சாவூர் பகுதியில் பிரபலமாக இருந்த இவை தற்காலத்தில் அரிதாகவே அணியப் படுகின்றன. சிறு வயதிலேயே பெண்கள் காதுகளில் துளை ஏற்படுத்திக்கொண்டு களிமண், இரும்பு, ஈயம் போன்றவற்றால் செய்யப்பட்ட வளையங்களின் மூலம் காதிலுள்ள துளையைப் பெரிதாக்கி பின் இதனை அணிவர். இந்த வகைக் காதணிகளுடன் ‘கொப்பு’ எனப்படும் காது மடலில் அணியக்கூடிய நகையும் தந்தையால் வழங்கப்படும்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### தில்ரூபா

தில்ரூபா ஒரு பிரபலமான வில் அதிர்கம்பி இசைக்கருவி. வடமேற்கு இந்தியாவில் இது பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. இடுப்புப் பகுதியில் சீரற்ற வடிவைக்கொண்டுள்ள இந்தக் கருவியில் அதிர்கம்பியால், வெவ்வேறு நீளங்களில் உள்ள கம்பிகளில் இசை எழுப்பப் படுகிறது. தில்ரூபாவின் இசையதிர்வு முழக்கக்கருவி தோலினால் மூடப்பட்டுள்ளது. தில்ரூபாவை மடியில் வைத்து அல்லது வாசிப்பவரின் முன்னால் வைத்து, அதன் கழுத்துப்பகுதியை இடது தோளில் தாங்கி, அமர்ந்த நிலையில், வலது கையால் வாசிக்கலாம்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### தம்புரா

தம்புரா மிகவும் பிரபலமான பக்கவாத்திய தந்தி இசைக்கருவி. வாய்ப்பாட்டுக் கலைஞருடனோ, வேறொரு கம்பி இசைக்கருவியுடனோ அல்லது புல்லாங்குழலுடனோ தம்புரா இசைக்கப்படும். இக்கருவியில் தொடர்ச்சியாக சன்னமாக ஒலி எழுப்பக் கூடிய நான்கு தந்திகள் உள்ளன. தம்புராவின் குடம் போன்ற அடிப்பகுதியை வாசிப்பவரின் முன் தரையில் வைத்து, தோளில் தம்புராவின் நீளமான கழுத்துப் பகுதியைத் தாங்கி, வலது கையால் தந்திகள் மென்மையாக இசைக்கப் படுகின்றன. இடது கை தம்புராவின் அடிப்பகுதியைத் தாங்கியிருக்கும்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### பாயன்

பாயன் தாள வாத்தியக் கருவியானது உலோகத் தால் செய்யப்பட்டுள்ளது. இக்கருவியின் மேல் பகுதியில் உள்ள சிறிய கருமையான வட்டத்தின் மீது தட்டும்போது மணியோசை போன்ற ஒலி ஏற்படும். சிறிய சுத்தியல் ஒன்றைக் கொண்டு கயிறுகளுக்கு இடையே உள்ள உருளையான மரப் பாகங்களில் சுதி சேர்க்கப்படும். இக்கருவி 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

### சப்பளாக்கட்டை
(கர்தால்)

கைகளால் தட்டி தாளம் இசைக்கக்கூடிய பாரம்பரிய இசைக்கருவியான 'கர்தால்' பெரும்பாலும் பஜனைகள், கீர்த்தனைகள், நாட்டுப்புற இசைக் கச்சேரிகளில் பக்கவாத்திய தாளக் கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது. மரத்தில் உள்ள துளைகளில் உலோக வட்டுகள் பொருத்தப் பட்டிருக்கும். கைகளால் தட்டப்படும்போது 'கண்கண்' என்ற ஒலி எழுப்பும். 'கை' எனப் பொருள்படும் 'கர' என்ற சொல்லையும் 'தாளம்' எனப் பொருள்படும் 'தால்' என்ற சொல்லையும் இணைத்து, இக்கருவி 'கர்தால்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### தோல் பாவை – பீமன்

'வாயாங் குலிட்' எனப்படும் ஜாவானியர்களின் தோல் பாவைக் காட்சியில் பீமனின் பாத்திரத்தைக் குறிக்கிறது இந்தப் படம். உருண்டையான விழிகளும் நிலைப்பாடும் நீண்ட கூரிய நகங்களும் பீமனை வலுவான, ஆற்றல் மிகுந்தவனாகச் சித்திரிக்கின்றன. 9ஆம் நூற்றாண்டில் ஜாவானிய அரசவைகளில் தோல் பாவைக் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவது பாரம்பரியம் மிக்கதாகப் போற்றப்பட்டது. திருவிழாக் காலங்களில் நடத்தப்படும் தோல் பாவைக் கலை நிகழ்ச்சி, அண்மையில் தொலைக்காட்சி, கல்வி பிரசாரங்களில் பயன்படுத்தப்படுகிறது.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### மயில் வாகனம்

முருகக் கடவுளின் வாகனமான மயிலின் முழுவதுமாக விரிந்துள்ள தோகை, இவ்வாகனத்துக்கு கம்பீரமான அழகு சேர்க்கிறது. உயிருள்ள மயில்களின் பொதுவான அளவைக்காட்டிலும் சற்றுப் பெரியதான இந்த மயில் வாகனம் வாயில் பாம்பைக் கவ்விய வண்ணமும் அதன் காலடியில் ஐந்து தலை நாகம் ஒன்று படுத்திருப்பது போலவும் வடிவமைக்கப் பட்டுள்ளது. வெண்கலத்தால் செய்யப்பட்ட உற்சவ மூர்த்திகள் கோயிலை வலம் வரும்போது இந்த வாகனத்தின் மீது இருத்தப்பட்டு கோயிலைச் சுற்றிக் கொண்டுவரப்படும்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

### கொம்பூதும் கணம்

இந்து மதப் புராணக் கதாபாத்திரங்களில் ஒன்றான, வேடிக்கையான, நான்கு கைகளை உடைய தடித்த, கொம்பூதும் கணத்தின் உருவம், மரத்தாலான தேரின் ஓர் அங்கமாக செதுக்கப் பட்டிருந்தது. கணத்தின் தலைமுடி பின்னப் பட்டிருப்பதுடன் நகைகளால் வெகுவாக அலங்கரிக்கப் பட்டிருப்பது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. கணத்தின் மென்மையான ஆன்மாவை இந்த உருவத்தின் முகபாவனை தெளிவாகக் காட்டுகிறது.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

# அனுமன்

சோழர்களின் சிற்பக் கலைக்குச் சான்றாக விளங்கும் 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்தப் பஞ்சலோக அனுமன் சிலை சிறியதாக இருப்பினும் சக்தி வாய்ந்தது. இம் மாவீரனின் இடுப்பில் உள்ள ஆபரணமும் தோள்களில் உள்ள குஞ்சமும் இந்தச் சிலைக்கே உரித்தான சிறப்பு அம்சங்கள். கைகளின் அமைப்பு வணக்கத்தையும் பணிவையும் ராமபிரானுக்கு எப்போதும் ஏவல் செய்யக் காத்திருப்பதையும் விளக்குவதாய் அமைந்திருக்கிறது.

**ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

## தலையில்லா குதிரைக்காரன்

14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்த ஈயச் சிலை, எம்ப்ரஸ் பிளேஸில் தோண்டி எடுக்கப்பட்டது. மஜபாஹிட் மன்னனின் காலத்தைய ஜாவானியக் கலைகளின் பாணியில் அமைந்துள்ள இச்சிலை, இந்தோனீசியத் தீவுகளில் செய்யப்பட்டு இருக்கலாம் என எண்ணப் படுகிறது. சிறியதாக இருந்தபோதும், தெமாசெக் ஒரு பகுதியாக இருந்ததாக நம்பப்படும், மஜபாஹிட் பேரரசின் எழுச்சிக்குக் காரணமாக இருந்த கடல்வழி வாணிகத் தொடர்பைக் குறிக்கும் முக்கியச் சின்னமாக விளங்குகிறது.

**சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

## மணற்கல் கல்வெட்டு

சிங்கப்பூர் ஆற்றின் முகப்புப் பகுதியில் 1843ஆம் ஆண்டு கண்டெடுக்கப்பட்டு தற்போது 'சிங்கப்பூர் கல்' என்று அறியப்படும் இந்த மணற்கல் கல்வெட்டு, 10 முதல் 13ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த ஆகப் பழைய கல்வெட்டாக அறியப்படுகிறது. இது 3 மீட்டர் உயரமும் 3 மீட்டர் அகலமும் கொண்டதாகும். அதன்மீது 1.5 மீட்டர் உயரம், 2.1 மீட்டர் அகலம் கொண்ட பரப்பளவில் 50 வரிகளுக்கு சுமத்திரா அல்லது பழைய ஜாவானிய எழுத்துகளைக் கொண்ட கல்வெட்டு பதிக்கப்பட்டுள்ளது.

**சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

# கோபுர மாதிரி

ஆறு படிநிலைகளைக் கொண்ட சைவக் கோயில் கோபுரத்தின் மாதிரி இது. கோபுரம் என்பது கோயிலின் நுழைவாயிலைக் குறிக்கிறது. கோபுர மாடத்தின் மீது கலசம் உள்ளது. கோபுரத்தில் உள்ள சிற்பங்கள் நேர்த்தியாக இருப்பதுடன் கைதேர்ந்த வேலைப்பாடு களைக் கொண்டுள்ளாது. இது மெட்ராஸ் மாகாணத் தின் பிரிட்டிஷ் காலனீய அலுவலர் ஒருவருக்காக 19ஆம் நூற்றாண்டில் செய்யப்பட்ட நினைவுப் பொருள் எனக் கருதப்படுகிறது.

**ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

# திரை ஓவியம்

இந்தோனீசியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட இந்தத் திரை ஓவியத்தில், ராமனுக்கும் ராவணனுக்கும் இடையே நடந்த ராமாயணப் போர்க் களக் காட்சி சித்திரிக்கப் பட்டுள்ளது. ஓவியத்தின் நடுவில் முக்கிய கதா பாத்திரங்களும் வலப் பக்கத்தில் வானரப் படையும் இடப்பக்கத்தில் அரக்கப் படையும் வரையப்பட்டுள்ளன. கருப்பு நிறக் கோட்டுச் சித்திரத்திற்குள் அரக்கு நிறச் சாயம் பூசப்பட்டிருப்பது, ஓவியத்துக்கு முப்பரிமாணத் தோற்றத்தைத் தருகிறது.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

# மலாய் வரலாற்றுப் பதிவேடு

16ஆம் நூற்றாண்டில் மலாக்காவை ஆண்ட சுல்தான்கள் மற்றும் அவர்களது மரபினர் பற்றி எழுதப்பட்ட கதைகளின் தொகுப்பே மலாய் வரலாற்றுப் பதிவேடு. சங் நீல உத்தமன் சிங்கப்பூரைக் கண்டு பிடித்தது பற்றிய குறிப்பும் ஃபோர்ட் கேனிங் குன்றில் உள்ள பீடுறு தோற்றமுடைய சுற்றுச் சுவர்களைப் பற்றிய மிகவும் துல்லியமான விளக்கங்களையும் இந்த மலாய் வரலாற்றுப் பதிவேடு அளிக்கிறது.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

# மணற்பாறைப் புடைப்புச் சிற்பம்

கதவு, சன்னல் நிலைகளின் மேல் பொருத்தப்படும் அலங்காரச் சிற்பம், இந்த மணற்பாறைப் புடைப்புச் சிற்பம். இந்தச் சிற்பத்தில் கம்போடியா, வியட்நாம் பகுதிகளில் வாழ்ந்த கெமர் இனத்தவருக்கும் சாம் இனத்தவருக்கும் இடையே நடந்த போர்க்களக் காட்சி சித்திரிக்கப்பட்டிருக்கிறது. 12,13ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இந்தச் சிற்பத்தின் முன்னால் மத்தளம், சேகண்டி போன்ற இசைக் கருவிகளுடன் கலைஞர்கள் காணப்படுகின்றனர்.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: ஆசிய நாகரிக அரும்பொருளகம்

# ஊஞ்சல் கிருஷ்ணன் ஓவியம்

மயிற்பீலி தாங்கிய முத்துக் கொண்டையுடன் ஊஞ்சலில் அமர்ந்திருக்கும் தெய்வீக வனப்புடைய கிருஷ்ணனை சிவன், பிரம்மா, சூரியன், சந்திரன் மற்றும் ரிஷிகள் சூழ்ந்திருக்க இசைக் கலைஞர்களும் நடன மணிகளும் அங்கு இருப்போரை மகிழ்விப்பதை இந்த ஓவியம் சித்திரிக்கிறது. தவழுதல், வெண்ணெய் திருடுதல், மாடு மேய்த்தல் போன்ற கிருஷ்ணனின் லீலைகள் சிறியதாக ஓவியத்தின் முன் புறத்தில் வரையப்பட்டுள்ளன.

ஆசிய நாகரிக அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: மலாய் மரபுடைமை மையம்

# ஹஜ் பயண இடைவார்

1800களின் பிற்பகுதியிலிருந்து 1900களின் முற்பாதி வரை முஸ்லிம் யாத்ரீகர்கள் மெக்காவுக்கு புனிதப் பயணம் மேற்கொள்ளும்போது தங்கிச் செல்லும் இடமாக சிங்கப்பூரின் கம்போங் கிளம் விளங்கியது. ஹஜ் புனித யாத்திரை செல்பவர்கள் அரபு நாட்டில் அணியும் வெண்மையான ஆடையின் மேலே கட்டிக் கொள்ளக் கூடிய, பல வசதி களைக் கொண்ட இந்த இடைவார் அப்பகுதியில் பலராலும் விரும்பி வாங்கப்பட்டது.

**மலாய் மரபுடைமை மையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: மலாய் மரபுடைமை மையம்

# ஹிகயட் அப்துல்லாவின் சுயசரிதை

பெரனாக்கன் சமூகத்தைச் சேர்ந்த அப்துல்லா பின் அப்துல் காதிர் எ.கெ.எ. முன்ஷி அப்துல்லா என்பவர் மலாக்காவில் 1811ஆம் ஆண்டு முதல் சர் ஸ்டாம்ஃபோர்ட் ராஃபிள்ஸ் இடம் எழுத்தராகப் பணி புரிந்தார். 1819ஆம் ஆண்டு சிங்கப்பூருக்குப் பெயர்ந்த அவர், ஆங்கிலேயர் ஆதிக்கத்தின் கீழ், மலாய் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து எழுதினார். அவரது சுயசரிதையான 'ஹிகயட் அப்துல்லா' 19ஆம் நூற்றாண்டு வாழ்க்கை முறைக்குச் சான்றாகும்.

**மலாய் மரபுடைமை மையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: மலாய் மரபுடைமை மையம்

# சுல்தான் மசூதியின் அறங்காவலர்கள்

சுல்தான் மசூதியின் முதல் கட்டடம் சுல்தான் ஹுசேன் ஷாவின் அனுமதியுடன் கிழக்கு இந்தியக் கம்பெனியின் நன்கொடை மூலம் 1823 – 1824க்கு இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது. அரசு மானியத்துடன் வளர்ச்சி பெற்றதுடன் சிங்கப்பூர் முஸ்லிம்கள் ஒன்று கூடி உரையாடும் இடமாக இது அமைந்தது. 1912ஆம் ஆண்டு முதல் மசூதியின் அறங்காவலர்களின் எண்ணிக்கை 12 ஆக இருக்கிறது. 1924ஆம் ஆண்டு இந்த மசூதி மறுநிர்மாணிக்கப்பட்டது.

**மலாய் மரபுடைமை மையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

### நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: மலாய் மரபுடைமை மையம்

# மிட்சல் மாதிரி என்சி புகைப்படக்கருவி

உள்ளூர் மலாய் சினிமா தயாரிப்பின் முதல் கட்டம் 1930களிலிருந்து ஜப்பானியர்கள் சிங்கப்பூரை ஆக்கிரமித்தது வரையிலானது. ஆரம்ப கால சினிமாத் துறை மலாய் நாட்டுப்புறக் கதைகளையும் 'பெங்சாவான்' எனப்படும் மலாய் பாரம்பரிய நடனங்களையும் தழுவி இருந்தது. 'பெங்சாவான்' கலைஞர்கள் திரைப்படங்களில் நடிக்கும் வாய்ப்புப் பெற்றனர். இந்தியாவைச் சேர்ந்த பி.எஸ். ரஜ்ஹன்ஸ் 1933ஆம் ஆண்டு இயக்கிய 'லைலா மஜ்னூன்', இங்கு தயாரிக்கப்பட்ட முதல் மலாய் திரைப் படம் என நம்பப்படுகிறது.

**மலாய் மரபுடைமை மையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.**

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:

தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)



படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

### நைலக்ஸ் புடவை

1960களில் ஜப்பானிலிருந்து தருவிக்கப்பட்ட வலுவான நைலான் நூலிலிருந்து தயாரிக்கப்பட்ட நைலக்ஸ் சேலைகள் மிகவும் பிரபலமாக இருந்தன. இந்தப் புதிய ரகச் சேலைகள் கட்டுபடியாகக் கூடிய விலையில் புதுமையாக இருந்தன. மெல்லியதாகவும் லேசாகவும் இருந்ததால் அணிபவருக்கு மெலிந்த தோற்றத்தைக் கொடுத்ததுடன் அதனைப் பராமரிப்பதும் எளிதாக இருந்தது. படத்தில் காணப்படும் இந்தச் சேலையை நளினி சி செண்டெலே என்பவர் அரும்பொருளகத்துக்கு நன்கொடையாக அளித்தார்.

மலாய் மரபுடைமை மையத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.


www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்

## தமிழ் மொழி விழா 2014

## நமது மொழி, நமது மரபு

(நமது வளமான மரபையும் கலாசாரத்தையும் அறிவோம்)




படம்: சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

### இந்தியன் மூவி நியூஸ்

இந்தியாவின் திரைத்துறைச் செய்திகளைத் தாங்கி சிங்கப்பூரில் வெளியான மாதாந்திர பத்திரிகை ‘இந்தியன் மூவி நியூஸ்’. 1978ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வெளியான இதழின் அட்டையில், இந்தியாவின் தமிழ்த் திரையுலகில் முக்கியமான நட்சத்திரமாகத் திகழ்ந்த சிவாஜி கணேசனின் புகைப்படம் அச்சிடப் பட்டிருந்தது. இந்தியத் திரையுலகுக்கான 50 ஆண்டு காலத்திற்கான பங்களிப்புக்காக 1997 ஆம் ஆண்டில் ‘தாதாசாகேப் பால்கே’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்தக் கலைப்பொருள் பற்றி கதை, கவிதை எழுதும் போட்டியில் கலந்து கொள்ளுங்கள்.

www.nhb.gov.sg/artefactually

ஆதரவு:
தேசிய மரபுடைமைக் கழகம்